# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறைச் சட்டம் 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075832

C

1. District மாவட்டம் : Theni District  PS காவல்நிலையம் : V & AC, Theni  Year ஆண்டு : 2022  FIR No. மு.த.அ. எண் : 01/2022  Date நாள் : 05.01.2022.

2. (i) Act சட்டம் : Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018.  Sections பிரிவுகள் : 7
   (ii) Act சட்டம் :  Sections பிரிவுகள் :
   (iii) Act சட்டம் :  Sections பிரிவுகள் :
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 04.01.2022 10.30 Hrs  Date to நாள் வரை :
   Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் :  Time to நேரம் வரை :
   (b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 05.01.2022  Time நேரம் : 15.30 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time நேரம் : 16.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written Petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் About 4 kms Southwest
   Beat Number முறைக் காவல் எண் :  (b) Address முகவரி : Office of the Food Safety officer, Theni Allinagaram Urban, Old Busstand Campus, Theni.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : M. Thirumalaipalpandian  (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் : V. Muniyandi
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 1966  (d) Nationality நாட்டினம் : Indian  (e) Passport No. வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : –
   Date of Issue வழங்கப்பட்ட நாள் :  Place of Issue வழங்கப்பட்ட இடம் :
   (f) Occupation தொழில் :  (g) Address முகவரி : D.No. 26, Veerappa Ayyanar Kovil street, Allinagaram, Theni.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Shanmugam, Food Safety officer, Theni Allinagaram Urban, Theni.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   – Nil –

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. —

10. —

11. —

12.

— Computer typed Separate sheet enclosed —

5/1/22

05/01/2022

ச. ஜெயப்பாரியா
காவல் ஆய்வாளர்

05-01-2022 1745 Hrs
Through PC 42558 V.Angaiyaraj

12. F.I.R. contents (Attach separate sheet if required):
(முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.01/2022-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

சமர்ப்பிக்கப்படுகிறது: தேனி, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 05.01.2022-ஆம் தேதி 15.30 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், அல்லிநகரம், வீரப்ப அய்யனார் கோவில் தெரு, க.எண்.26 என்ற முகவரியில் வசிக்கும் திரு.முனியாண்டி என்பவரின் மகன் திரு.M.திருமலைபால்பாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்கண்ட முகவரியில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் தேனி C2 C2 சாலை, மிராண்டா லைன், தேனி என்ற முகவரியில் கடல் உணவகம் என்ற பெயரில் கடை வைத்து மீன், கோழி, முட்டை விற்பனை செய்து வருகிறேன். நான் இந்த கடையை 2018ம் வருடம் என் பெயரில் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையத்தில் பதிவு சான்றிதல் எண்: 12418022000113 பெற்று ஒவ்வொரு வருடமும் புதுப்பித்து வருகிறேன். கடைசியாக கடந்த 27.01.2021 தேதி இரண்டு வருடத்திற்கு புதுப்பித்து அது வரும் 30.01.2023 வரை அமலில் இருக்கின்றது. கடந்த 30.12.2021ம் தேதி தேனி அல்லிநகரம் நகர்புற உணவு பாதுகாப்பு அதிகாரி திரு. சண்முகம் என்பவர் என் கடையை இன்ஸ்பெக்சன் பார்க்க வந்துள்ளார். அந்த சமயம் நான் சொந்த அலுவலாக சென்னையில் இருந்தேன். எனது மகன் ஹரிஹரபாண்டியன் மற்றும் வேலையாட்கள் கடையில் இருந்துள்ளனர். இன்ஸ்பெக்ஷன் சமயத்தில் எங்கள் கடையிலிருந்த சில மீன்களை அவர் கொண்டு வந்துள்ள கருவியில் சரிபார்பதுபோல் செய்துவிட்டு அது ஆசிட் கலக்கப்பட்ட மீன்கள் என என் மகனிடம் சொல்லிவிட்டு, அந்த மீன்களை பரிசோதிக்காமலும் மற்றும் விற்பனைக்கு வைத்திருந்த மற்ற விலை உயர்ந்த சுமார் 15 கிலோ மீன்களையும் சேர்த்து எடுத்துச் சென்றுள்ளார். அப்போது என் மகனிடம், அடுத்தவாரம் "உன் அப்பாவை எனது அலுவலகத்தில் வந்து என்னை சந்திக்கச் சொல்" என்று கூறிவிட்டு சென்றுள்ளார். மேற்படி சம்பவம் அனைத்தையும் நான் சென்னையில் இருந்து வந்தவுடன் கடந்த 31.12.2021 தேதி என் மகன் என்னிடம் சொன்னான். நான் 03.01.2022 தேதி காலை சுமார் 10.30 மணியை போல தேனி பழைய பஸ் ஸ்டாண்டிற்குள் உள்ள அவரது அலுவலகத்தில் அவரை சந்தித்து கேட்கலாம் என்று போனேன். அவரும் அங்கு இருந்தார். ஆனால் அவரது அலுவலகத்தில் வேறு இரண்டு நபர்கள் இருந்ததால், மறுநாள் 04.01.2022 தேதி காலையில் வந்து அவரைப் பார்க்கச் சொல்லி என்னை அனுப்பிவிட்டார். நானும் அதே போல் நேற்று 04.01.2022 தேதி காலை சுமார் 10.30 மணிக்கு அவரது அலுவலகத்திற்குச் சென்று அவரை சந்தித்தேன். அப்போது என்ன சார், கடைக்கு

ரெய்டு வந்ததாக பையன் சொன்னான். ஆசிட் கலந்த மீன் வச்சி விக்கிறோம் சொன்னிங்கன்னு பையன் சொன்னான் சார். ஆசிட் கலந்த மீன்லாம் ஒரு நாளு நான் வைத்து விற்கமாட்டேன் சார், அக்கம் பக்கத்தில் கூட என் கடையை பத்தி விசாரித்துக்கொள்ளுங்கள் சார் என்று கூறினேன். அப்போது அவர் என்னிடம் என்னங்க நீங்க, உங்களுக்கு தெரியாதது இல்ல. இது வழக்கமா பன்ற ரெய்டு தான். புதுவருஷம் பிறந்திருக்குல்ல. நாங்களும் எங்க அதிகாரிகளை கவனிக்க வேண்டியிருக்கு. நீங்க ஒரு பத்தாயிரம் பதினைந்தாயிரம் கொடுத்து கவனிச்சீங்கன்னா அபராதமே போடாம இத நான் முடிச்சிடுவேன். இது மட்டுமில்ல, இனிமே உங்க கடைக்கு ரெய்டு வரும்போது சின்ன தொகையை பேருக்கு அபராதமா போட்டுட்டு உங்கல கண்டுக்காம விட்டுருவேன். உங்களுக்கு தொந்தரவு இருக்காது, எப்பவும் போல் நீங்க கடையை நடத்திக் கொள்ளலாம் என்று சொன்னார். அதற்கு நான் என்னோட கஷ்டத்த எடுத்து சொன்னேன். அதற்கு அவர் சரி ஒரு பத்தாயிரம் மட்டும் கொடுங்க, வர்ற வெள்ளிக்கிழமைக்குள்ள ஏற்பாடு பன்னிட்டு என்கிட்ட வந்து கொடுங்க, இல்லனா உங்களுக்கு பிரச்சனை தான், அதுக்கப்புறம் வருத்தப்பட்டு பிரயோஜனம் இல்லன்னு சொல்லி அனுப்பி விட்டார். அவர் பேசினத கேட்டதிலிருந்து எனக்கு பெருத்த மன உளைச்சலா இருந்தது. எந்த தப்பும் செய்யாமல் அவருக்கு லஞ்சமாக ரூ.10,000/- கொடுக்க என் மணம் விரும்பவில்லை. அதனாலா லஞ்ச ஒழிப்பு போலிசாரிடம் புகார் கொடுக்க முடிவு செய்து புகார் எழுதிக் கொண்டு வந்தேன். திரு. சண்முகம் என்னிடம் லஞ்சமாகக் கேட்ட பணம் ரூ.10,000/-ஐயும் கொண்டுவந்துள்ளேன். எனவே என்னிடம் லஞ்சம் கேட்ட தேனி அல்லிநகரம் நகர்புற உணவு பாதுகாப்பு அதிகாரி திரு. சண்முகம் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எனது மீன்கடையை கடந்த 27.01.2021ம் தேதி புதுபித்த Fssai சான்றிதலின் நகல் இனைத்துள்ளேன். இப்படிக்கு Sd/- XXXXX
(M.திருமலைபால்பாண்டியன்)

Sir, Received this complaint on 05.01.2022 at 15.30 hrs. A confidential verification was conducted in respect of the complaint as well as the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Crime No.01/2022, u/s 7 of the P.C.Act 1988 as amended by the P.C.(Amendment) Act, 2018 was registered on 05.01.2022 at 16.30hrs. Sd/- (ச.ஜெயப்பிரியா,05.01.2022, காவல் ஆய்வாளர், ஊ.த.க.பிரிவு, தேனி).

Original FIR along with original complaint of Tr.M.Thirumalaipalpadian is sent to the Chief Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent to the superior officers concerned.

05/01/2022
(C.JEYAPRIYA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.